Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.385/2023 DW-1**

Name : கண்ணன்
Father / Husband name : பெருமாள்
Village : பிரம்மதேசம்
Age : 50

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.06.2026

Complainant present. Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். புகார்தாரர் என்மீது இந்நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் ஆவணிப்பூரில் ஸ்ரீவசுதேவர் என்ற பெயரில் பெட்ரோல்பங்க் நடத்திவருகிறேன். லோடு எடுப்பதற்காக பைனான்சியரிடம் 2, 3 நாட்கள் பணம் கடனாக பெற்று திரும்பவும் பணத்தை கொடுப்பதை வைத்துக்கொண்டேன். அந்த வகையில் திண்டிவனம் தீர்த்தக்குளம் தென்கரை பகுதியில் வசிக்கும் பைனான்சியர் செல்வம் அவரின் மகன் வெங்கடேசன் என்பவர் பைனான்ஸ் செய்துவருகிறார். நான் அவரிடம் 2, 3 நாட்கள் பணம் கடனாக வாங்கி திரும்ப செலுத்துவது வழக்கம். நான் வாங்கிய கடனை ரூ.10,00,000/- வரை அவருக்கு கொடுக்காமல் நின்றுவிட்டது. இதற்காக நானும் அவரும் 21.01.2023 அன்று ஒரு போக்கிய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். அந்த ஒப்பந்தத்தில் செக்கியூரிட்டியாக நான் எனது கம்பெனியில் பெயரில் ஸ்ரீவசுதேவர் ஏஜென்சி, எஸ்பிஐ வங்கி, முருக்கேரி கிளையில் கணக்கு வைத்துள்ள எனது நடப்புக்கணக்கு காசோலை 153106, 153107, 153108 ஆகிய 3 காசோலைகள் மற்றும் நான் கையொப்பம் செய்த பூர்த்தி செய்யாத 50 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பர், பச்சை பேப்பர், பாண்டு பேப்பர், எனது மகன் ஜெயராம் கையொப்பம் செய்த பாண்டு பேப்பர் ஆகிய அனைத்தும் 21.01.2023 அன்று வெங்கடேசனிடம் கொடுத்தேன். அதன்படி 6 மாத காலத்திற்குள் எனது பங்கை புகார்தாரர் வெங்கடேசன் நடத்தி ஒப்பந்தம்

முடிந்துவிட்டது. எனது பங்கிலிருந்து வெங்கடேசன் வெளியில் சென்றுவிட்டார். மேற்படி நான் வெங்கடேசனிடம் ஆவணங்களை திரும்பக்கேட்டபோது அவர் தருவதாக சொல்லி காலதாமதம் செய்தார். இதற்குள் மணிவண்ணன் அவரின் வழக்கிறஞர் மூலம் எனக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார். நான் உண்மை விவரங்களை சொல்லி எனது வழக்கிறஞர் மூலம் பதில் அறிவிப்பை புகார்தாரர், அவரின் வழக்கறிஞர் மற்றும் வெங்கடேசனுக்கு அனுப்பினேன். பதில் அறிவிப்பை மறைத்து இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரருக்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பு அவர் ஊரில் வசிக்காத காரணத்தினால் பதில் அறிவிப்பு திருப்பபப்பட்டுள்ளது. வழக்கின் காசோலைகளை புகார்தாரரிடம் நான் கொடுக்கவில்லை, வெங்கடேசனிடம் கொடுத்தேன். காசோலை கொடுத்ததற்கு நோட்டரி பப்ளிக் மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, அதில் காசோலை எண் உள்ளது. புகாரை தள்ளுபடி செய்யவேண்டுகிறேன்.

| எ.சா.ஆ. | தேதி | ஆவண விவரம் | அசல் / நகல் |
|---|---|---|---|
| 1 | 21.01.2023 | நானும் வெங்கடேசனும் ஏற்படுத்திய போக்கிய ஒப்பந்த பத்திரம் | அசல் |
| 2 | 13.07.2023 | பதில் அறிவிப்பு மற்றும் 3 அஞ்சலக ரசீது | அசல் |
| 3 | 21.07.2023 | திருப்பப்பட்ட பதில் அறிவிப்பு கவர் | அசல் |

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை வேற ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.